Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

ISO : 9001:2015; QT-57977/1125

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 138 | வெள்ளிக்கிழமை Friday | 20.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பெருமிதம்

சென்னை: ஜவுளி ஏற்றுமதியில் குஜராத், மகாராஷ்டிராவை தமிழ்நாடு முதலிடம் பின்னுக்குத் தள்ளி பிடித்துள்ளது என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஜவுளி ஏற்றுமதி: திராவிட மாடலின் 4 ஆண்டுகளில் 29% வளர்ச்சி. குஜராத்தையும் மகாராஷ்டிராவையும் பின்னுக்குத் தள்ளித் தமிழ்நாடு முதலிடம்.

2020–2021–இல் 6,193.39 மில்லியன் டாலராக இருந்த தமிழ்நாட்டின் ஏற்றுமதி அளவு, திமுக அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் அடுத்த நான்காண்டுகளில் 7,997.17 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் தமிழ்நாடு மட்டுமே 21.84%! இவை அனைத்தையும் சொல்வது நாமல்ல, ஒன்றிய அரசு! சாதனைகளைச் சொல்லி வெல்வோம் ஒன்றாக!" என பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, மத்திய அரசின் ஏற்றுமதி–இறக்குமதி விவரங்கள் குறித்து ஆண்டுவாரி வர்த்தக பகுப்பாய்வுக்கான தேசிய ஏற்றுமதி–இறக்குமதிகளை பதிவு செய்திடும் நிர்யாத் நிறுவனம் ஆண்டுதோறும் ஆய்வறிக்கை வெளியிட்டு வருகிறது. இந்த நிர்யாத் நிறுவனம் 2024–25–ம் ஆண்டுக்கான ஜவுளி ஏற்றுமதிகள் குறித்த அறிக்கையை தற்போது வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள ஜவுளி துணிகளின் மதிப்பு 36,610 மில்லியன் டாலர் (சுமார் ரூ.3 லட்சத்து 40 ஆயிரம் கோடி). இதில் தமிழ்நாடு மட்டும் 7997.17 மில்லியன் டாலர் (ரூ.73 ஆயிரத்து 925 கோடி) மதிப்புடைய ஜவுளித் துணிகளை ஏற்றுமதி செய்து ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு இந்தியாவில் முதல் இடம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டினை அடுத்து, தொழில் வளர்ச்சியில் எப்போதும் முன்னணியில் நிற்கும் மாநிலங்களான குஜராத் 2–ம் இடமும், மராட்டியம் 3–ம் இடமும் பெற்றுள்ளன.

இந்த அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி அமைவதற்குமுன் 2020–21–ம் ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதியான ஜவுளி துணிகளின் மதிப்பு 6193.39 மில்லியன் டாலர் மட்டுமே (சுமார் ரூ.57 ஆயிரத்து 251 கோடி). தமிழ்நாட்டில், 2020–21 ஆண்டினைவிட 2024–25–ம் ஆண்டில் 1803.78 மில்லியன் டாலர் (சுமார் ரூ.16 ஆயிரத்து 670 கோடி) அளவுக்கு. அதாவது 4 ஆண்டுகளில் 29 சதவீதம் அளவுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்து தமிர்நாடு சாதனை நிகழ்த்தியுள்ளது.

5 தலைநகரங்கள், அனைவருக்கும் அரசு வேலை: நாம் தமிழர் தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்ட சீமான்

நாம் தமிழர் கட்சியின் செயல்பாட்டு வரைவு அறிக்கைகளை கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டார். சென்னை கிண்டியில் தனியார் விடுதியில் நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியீடு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தேர்தல் அறிக்கைகளின்படி, நாம் தமிழர் கட்சி ஆட்சி அமைந்தால், தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சி நடத்தப்படும்.

மக்களின் கருத்துக்கு ஒரு அரசு இயங்க முடியாது; மக்களின் நலனுக்காக மட்டுமே இயங்கமுடியும்என்பதே கொள்கை. தமிழகத்தில் நாம் தமிழர் கட்சி ஆட்சி அமைந்தால், 5 தலைநகரங்கள் உருவாக்கப்படும். மதுரையை மொழி, கலை மற்றும் பண்பாட்டுத் தலைநகராகவும், சென்னையை தொழில்நுட்பத் தலைநகராகவும், கோவையை தொழில் தலைநகராகவும், கன்னியாகுமரியை தமிழர் மெய்யியல் தலைநகராகவும், திருச்சியில் நிர்வாகத் துறை தலைநகராகவும் மாற்றப்படும்.

மேலும், தலைமைச் செயலகம் மற்றும் சட்டப்பேரவையை திருச்சிக்கு மாற்றியமைக்கப்படும். அனைவருக்கும் அரசு வேலை.

1 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் பயிற்சி முறைக் கல்வி பயிற்றுவிக்கப்படும்.

பல கோடி பனைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

குடிநீர் விற்பனைக்குத் தடை விதிக்கப்படும். கடலில் வீணாக 2,300 டிஎம்சி மழைநீர் கலப்பதைத் தடுக்க திட்டங்கள் வகுக்கப்படும்.

இனி படிக்காதவர் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம்.

மாநில அரசுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும்வகையில் சட்ட மாற்றங்களுக்காக பாடுபடுவோம்.

மாநிலத்தில் வசூலிக்கப்படும் வரிகளில் மாநிலத்துக்கு 75 சதவிகிதமும், மத்திய அரசுக்கு 25 சதவிகிதமும் வழங்க வலியுறுத்தப்படும்.

வாக்குப்பதிவு கட்டாயமாக்கப்படும் வகையில், 100 சதவிகிதம் வாக்களித்ததற்கான அரசின் சான்றிதழ் இருந்தால் மட்டுமே அரசின் சலுகைகள் வழங்கப்படும்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு பதிலாக மீண்டும் வாக்குச்சீட்டு முறைகொண்டு வரப்படும்.

3 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஒரு நாடாளுமன்ற தொகுதி கொண்டு வரப்படும்.

சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் பெண்களுக்கு தனித் தொகுதி; விளையாட்டுத் துறையில் சம வாய்ப்பும் இடம்பெறும்.

பாலியல் குற்றங்களுக்கு எதிரான கடும்நடவடிக்கைகளாக, குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்படும்.

மாற்றுத் திறனாளிகளுக்கென தனி அமைச்சகம் அமைக்கப்படுவதுடன், உள்ளாட்சியில் 5 சதவிகித இட ஒதுக்கீடு.

தமிழகத்தில் 8.65 லட்சம் முதியோர், மாற்றுத்திறனாளிகள் வீட்டிலிருந்தே வாக்களிக்க படிவம் விநியோகம்

சென்னை: தமிழகத்தில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் 8.65 லட்சம் பேர் வீட்டிலிருந்தே வாக்களிப்பதற்கான படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க, வாக்குச்சாவடிக்கு வர முடியாத 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் 40 சதவீதத்துக்கு மேல் உடல் பாதிப்புடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டிலிருந்தே தபால் வாக்கு மூலம் வாக்களிக்கதேர்தல்ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு, தேர்தல் அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 5 நாட்களுக்குள் தொடர்புடைய தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருக்கு 12டி படிவம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். தமிழகத்தில் தற்போது, 85 வயதுக்குமேற்பட்டவர்கள் 4 லட்சம் பேர், 100 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 2,530 பேர், மாற்றுத் திறனாளிகள் 4.63 லட்சம் பேர் என மொத்தம் 8.65 லட்சம் பேர் உள்ளனர். இவர்கள் தபால் வாக்கு செலுத்தஏதுவாக,வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தகுதியுள்ள வாக்காளர்களின் வீடுகளுக்குச் சென்று படிவங்களை வழங்கி, பூர்த்தி செய்த படிவங்களை பெற்று வருகின்றனர். வீட்டில் இல்லாதவர்களின் வீடுகளுக்கு மீண்டும் ஒரு முறை செல்ல உள்ளனர். 2 முறையும் வாக்காளர் வீட்டில் இல்லையெனில், அவர் தபால் வாக்களிக்க விருப்பமற்றவராகக் கருதப்படுவார் என்று தேர்தல் நடத்தும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்னர், இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு, ஒவ்வொரு வரின் வீடுகளுக்கு சென்று, வாக்குச்சாவடி அமைப்பை ஏற்படுத்தி, வாக்களிக்க வைப்பதற்கான ஏற்பாடுகளை அந்தந்த தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரே நாளில் இருமுறை வீழ்ச்சி: ரூ.14,000க்கு கீழாக சென்ற ஒரு கிராம் விலை

சென்னை:

சென்னையில் (மார்ச் 19) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரே நாளில் 2 முறைகுறைந்து, கிராம் ரூ.14,000–க்கு கீழாக சரிந்துள்ளது. ஒரே நாளில் பவுனுக்கு ரூ.5,360 குறைந்து ஒரு பவுன் ரூ.1,11,200–க்கு விற்பனையாகிறது. தொடர் உச்சங்களில் மிரட்டிய தங்கம் விலையின் படிப்படியான சரிவு வாடிக்கையாளர்களுக்கு ஜாக்பாட் மகிழ்ச்சியை தந்துள்ளது.

இந்த வாரத்தின் முதல் வர்த்தக நாளான திங்கள்கிழமையன்று தங்கம் விலை கிராமுக்கு ரூ.400 குறைந்து பவுன் ரூ.1,17,680–க்கு விற்பனை செய்யப்பட்டது. (மார்ச் 18) 22 காரட் தங்கம் விலை ஒரு கிராம் ரூ.14,570–க்கும், ஒரு பவுன் ரூ.1,16,560–க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் தொடர்ந்து இன்றும் தங்கம் விலை அதிரடியாக இரண்டு முறை குறைந்துள்ளது. அதன்படி, சென்னையில் (வியாழக்கிழமை) காலை கிராமுக்கு ரூ.270 குறைந்து ஒரு கிராம் ரூ.14,300–க்கு விற்பனை செய்யப்பட்டது. பின்னர், மாலை வேளையில் கிராமுக்கு மேலும் ரூ.400 குறைந்து ஒரு கிராம் ரூ.13,900–க்கு விற்பனையாகிறது. ஒரே நாளில் மட்டும் கிராமுக்கு ரூ.670 குறைந்துள்ளது. அதேபோல் ஒரே நாளில் பவுனுக்கு ரூ.5,360 குறைந்து ஒரு பவுன் ரூ.1,11,200–க்கு விற்பனையாகிறது.

இந்த விலை சரிவு நகை வாங்குவோர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தமிழகம் போன்ற மாநிலங்களில் இனி திருமண சீசன் என்பதால் இப்போதே நகையை வாங்கி வைத்துக் கொள்ள ஆர்வம் காட்டப்படுகிறது.

தங்கம் விலை சரிவதைப் போல் வெள்ளி விலையும் குறைந்துள்ளது. வெள்ளியின் விலை இன்று ஒரு கிலோவுக்கு ரூ.10,000 குறைந்துள்ளது. ஒரு கிராம் ரூ. 265–க்கும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ. 2,65,000–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை குறைவுக்கு 3 முக்கியக் காரணங்கள்:

* மேற்கு ஆசிய மோதல் காரணமாக கச்சா எண்ணெய் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. கச்சா எண்ணெய் விலை ஏற்றம் என்பது, உலக நாடுகளில் பணவீக்கத்தை எதிர்பார்த்ததைவிட நீண்ட காலம் உயர்ந்தே இருக்கச் செய்யும் என்ற அச்சத்தைக் கடத்தியுள்ளது. அந்த வகையில் பணவீக்க அச்சம்தான் தங்கம் விலை சரிவுக்கு முதன்மைக் காரணம் என்று கணிக்கப்படுகிறது.

* தங்கம் விலை கடந்த சில மாதங்களாகவே பல்வேறு புதிய உச்சங்களைத் தொட்டுவிட்ட நிலையில், இத்தகைய உச்சத்துக்குப் பின்னர் முதலீட்டாளர்கள் ப்ரா:பிட் புக்கிங் மீது கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். அதாவது தங்கத்தை விற்றுவிட்டு வேறு பக்கம் முதலீட்டு கவனத்தைத் திருப்பத் தொடங்கியுள்ளனர். மேலும், நிலையான வருமானம் தரக்கூடிய வேறு சொத்துகளில் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளனர். இதனால், தங்கம் விலை சமீபநாட்களாக குறைந்து வருகிறது.

* சர்வதேச அளவிலான பொருளாதார நிச்சயமற்ற சூழல்களில், தங்கமும், டாலரும் தான் பாதுகாப்பான முதலீடாகக் கருதப்படுகிறது. ஆனால், இப்போதைய சூழலில் டாலர் அதிக புழக்கத்தை ஈர்க்கிறது. டாலரின் மதிப்பு வலுவாக இருக்கும்போது, தங்கத்தை மற்ற நாணயங்களைக் கொண்டு வாங்குவது என்பது கைக்கு எட்டாத விலையாகிவிடுகிறது. இதனால் சர்வதேச அளவில் தங்கத்தின் தேவை குறைகிறது. அவ்வாறு தேவை குறையும்போது அதுவும் தங்கம் விலை மீது கூடுதல் அழுத்தத்தை செலுத்துகிறது. ஆக, டாலர் மதிப்பின் எழுச்சியும் தங்கம் விலை சரிவுக்குக் காரணம். இவ்வாறாக, உலகளாவிய சந்தைகள் புவிசார் அரசியல் பதற்றங்களைக் காட்டிலும் பல்வேறு பொருளாதாரக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாலேயே தங்கம் விலை குறைகிறது.

செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம் DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தூத்துக்குடி தொகுதி அமைச்சர் கீதா ஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமியிடம் முதலமைச்சர் ஸ்டாலின் நேர்காணல்

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்த

அமைச்சர் கீதா ஜீவன் மற்றும் மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்டோரிடம் திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் நேர்காணல் நடத்தினார்.

தமிழகத்தின் 17-வது சட்டமன்றத் தேர்தல் வரும் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் மார்ச் 30-ம் தேதி தொடங்கி ஏப்ரல் 6-ம் தேதி வரை நடைபெறுகிறது. தேர்தல் தேதி நெருங்குவதைத் தொடர்ந்து, அரசியல் கட்சிகள் வேட்பாளர் தேர்வில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற இந்த நேர்காணலில், திமுக தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில், கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். இதில் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, தலைமைக் கழகச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் அடங்கிய குழுவினர் விருப்ப மனு அளித்தவர்களிடம் கலந்துரையாடினர்.

இதில், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, விருதுநகர், ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். இதில் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருந்த வடக்கு மாவட்ட செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன், தலைமை செயற்குழு உறுப்பினர் மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில மீனவரணி துணைச் செயலாளர் துறைமுகம் புளோரன்ஸ், மற்றும் ஆர்தர் மச்சாது உள்ளிட்ட 4பேர் நேர்காணலில் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் சென்னை அண்ணா அறிவாலயத்தில், முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் 2ஆவது நாளாக நேர்காணல் நடத்தினார். இதில், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, விருதுநகர், ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். இதில் ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தேர்தலுக்கான நேர்காணலில் தூத்துக்குடி வடக்கு மாவட்டம் மாநகர துணை அமைப்பாளர் சுற்றுச்சூழல் அணி T.A.மகேஸ்வரன் சிங் கலந்து கொண்டார்.

சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை"மற்றும் "யுனெடெட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டி"யின் தேசிய தலைவர் ஆர். செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர். தன்ராஜ் வழிகாட்டுதலுடன் ஈரோடு மாவட்ட தலைவர் ஜெ.கோபிநாதன், ஈரோடு மாவட்ட செயலாளர் முனைவர் G.தங்கவேல் தலைமையில் ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், மேட்டுநாசுவம் பாளையம் கிராமத்தில் இருக்கும் ஊராட்சி அலுவலகத்தில் தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் உட்பட 10க்கும் மேற்பட்ட நபர்களுக்கு "WCWR ன் சிங்கப்பெண்" விருதுக்கான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தேனி முல்லை அரிமா சங்கத்தின் தலைவர் நாகராஜ் அவர்கள் தலைமையில் சிதம்பரம் அவர்களின் வழிகாட்டுதல் பெயரில் துணைத்தலைவர் ஆண்டிப்பட்டி L.n.s.சுதாகர் அவர்களின் புதல்வர் S.ஸ்ரீபாலா அவர்கள் பிறந்தநாள் விழா கொண்டாடும் விதமாக 5வது வார்டில் கணவனை இழந்த P.சித்ரா என்ற கைம்பெண்ணின் வாழ்வாதாரத்திற்கு தையல் இயந்திரம் வழங்கிய S.ஸ்ரீபாலா அவர்கள் நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ இறைவனை வேண்டுகிறேன். வாழ்த்துகளுடன் Gr.அய்யப்பன் தலைவர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், தேனி. Dr.s.கிருஷ்ணபிரபா அய்யப்பன் 5வது வார்டு நகர்மன்ற உறுப்பினர், அல்லிநகரம், தேனி.

கூடலூர் தோட்ட தொழிலாளர் தொழிற்பயிற்சி மையத்தில் ஐடிஐ மாணவர்களுக்கு இலவச மருத்துவ முகாம்

கூடலூர் அருகே கூடலூர் தோட்ட தொழிலாளர் தொழிற்பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு ஆகியன சார்பில் நடைபெற்ற மருத்துவ முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். தோட்ட தொழிலாளர் தொழிற்பயிற்சி மைய முதல்வர் ஷாஜி ஜோர்ஜ், இளம் செஞ்சிலுவை சங்க ஒருங்கிணைப்பாளர் செல்வகுமார், செஞ்சிலுவை சங்க நிர்வாகி லாய்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சிலுவை சங்க மாவட்ட செயலாளர் மோரிஸ் சாந்தகுருஷ் முகாமை துவக்கி வைத்தார். முகாமில் செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் ஸ்ரீநாத் தலைமையில் மருந்தாளுநர் நவீன், செவிலியர் சுமதி உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவ குழுவினர் பயிற்சி மையத்தில் உள்ள 100கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை அளவு மற்றும் பொது மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர். தேவையுள்ளவர்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டது.

தமிழகத்தில் வெப்பநிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சுகாதாரத்துறை எச்சரிக்கை

தமிழகத்தில் வெப்பநிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தமிழக சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும், "காலை 11 - மாலை 3 மணி வரை குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம். கட்டாய தேவைக்காக வெளியே சென்றால் குடை, உடல் முழுவதும் மறைக்கும் அளவிற்கு பருத்தி ஆடைகள் பயன்படுத்த வேண்டும்", இவ்வாறு தெரிவித்துள்ளது

ஆண்டிபட்டியில் தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு அனைத்து நாயுடு நாயக்கர் சங்கம் சார்பில் மாமன்னர் திருமலை நாயக்கரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர்

ஆண்டிபட்டியில் தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு அனைத்து நாயுடு நாயக்கர் சங்கம் சார்பில் மாமன்னர் திருமலை நாயக்கரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர்

மேலும் மாமன்னர் திருமலை நாயக்கர் புகழை போற்றி கோஷம் எழுப்பி தெலுங்கு வருடப்பிறப்பை வரவேற்கும் விதமாக ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களையும்தெரிவித்துக்கொண்டனர்.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி பேருந்து நிலையம் அருகே உள்ள திருமலை நாயக்கரின் திருஉருவ சிலைக்கு தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு ஆண்டிபட்டி அனைத்து நாயுடு நாயக்கர் சங்கம் சார்பில் ஆண்டிபட்டி தலைவர் ஜெயராமன் மற்றும் செயலாளர் பாலமுருகன் ஆகியோர் தலைமையிலும் பொருளாளர் நவநீதகிருஷ்ணன் முன்னிலையிலும் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். முன்னதாக திருமலை நாயக்கரின் திருவுருவ சிலைக்கு முன்பாக தேங்காய் பழம் வைத்து சிறப்பு பூஜைகள் செய்து மகாதீபாரதனை காட்டி வழிபாடு செய்ததோடு மாமன்னர் திருமலை நாயக்கரின் புகழை போற்றி வாழ்த்து கோஷங்களை எழுப்பினர். பின்னர் தெலுங்கு வருடபிறப்பை வரவேற்கும் விதமாக ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் பாலாஜி பால்கிருஷ்ணன் திருப்பதி கணேசன் ஆசிரியர் ஜெயராம் உள்ளிட்ட அனைத்து நாயுடு நாயக்கர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இமாச்சலில் அரசு ஊழியர்கள் ஜீன்ஸ், டிஷர்ட் அணிய தடை

இமாச்சலில் கடந்த 2017 ம் ஆண்டு, ஆகஸ்ட் 3ம் தேதி வெளியிடப்பட்ட அரசு ஊழியர்களுக்கான ஆடை நெறிமுறைகளை அனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என மாநில அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தலைமைச்செயலாளர் சஞ்சய் குப்தா வெளியிட்டுள்ள விரிவான வழிகாட்டு தலின்படி, அனைத்து அரசு ஊழியர்களும் கண்ணியமான, சுத்தமான மற்றும் தொழில் முறை சார்ந்த ∴பார்மல் ஆடைகளை மென்மையான வண்ணங்களில் அணிய வேண்டும்.

அலுவலகத்தில் இருக்கும் போதோ அல்லது நீதிமன்றத்தில் ஆஜராகும் போதோ கேஷுவல் அல்லது பார்ட்டி உடைகளை அணியக் கூடாது.

ஆண் ஊழியர்கள் காலர் வைத்த சட்டை மற்றும் பேன்ட் அணிய வேண்டும். ஷூ, செருப்பு போன்ற பொருத்தமான காலணிகளை அணிய வேண்டும். பெண் ஊழியர்கள் புடவை, ∴பார்மல் சூட்கள், சல்வார், சுரிதார் அல்லது துப்பட்டாவுடன் கூடிய குர்தா போன்ற∴பார்மல்ஆடைகளும் ஷூ, செருப்பு போன்ற பொருத்தமான காலணிகளும் அணிய வேண்டும். அரசு ஊழியர்கள் ஜீன்ஸ் மற்றும் டி-ஷர்ட் அணிய அனுமதியில்லை.

மேலும், அரசு கொள்கைகள் அல்லது திட்டங்கள் குறித்து தனிப்பட்ட சமூக ஊடகக் கணக்குகள் வாயிலாக கருத்து தெரிவிப்பதையும் ஏதேனும் பொது மேடை, வலைப்பதிவு அல்லது சமூக ஊடகத் தளங்களில் அரசியல் அல்லது மத ரீதியான கருத்து வெளியிடுவதையும் அரசு ஊழியர்கள் தவிர்க்க வேண்டும் என்று இமாச்சல் அரசு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், இந்த அறிவுரை மற்றும் வழிகாட்டு தலை அரசு ஊழியர்கள் மீறினால் அது கடுமையானதாக கருதப்படும். அத்தகைய அரசு ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்து உள்ளது.

வருமான வரித்துறை அதிகாரியிடம் ரூ.20 லட்சம் ஏமாற்றிய கிளி ஜோசியர்

பெங்களூரு: பெங்களூருவில் உள்ள பாரதி நகரை சேர்ந்த 55 வயதான ரமேஷ் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வருமான வரித்துறையில் அதிகாரியாக கடந்த 30 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார்.

இவர் கடந்த மார்ச் 6-ம் தேதி பாரதிநகர் காவல் நிலையத்தில் அளித்த புகாரில் கூறியதாவது: கடந்த டிசம்பரில் கிளி ஜோசியர் சேகர் (59) எனக்கு அறிமுகமானார். எனது ஜாதகத்தை ஆராய்ந்த பின்னர், கிளி ஜோசியம் பார்த்தார். எனக்கு பணி இட மாற்றமும், பதவி உயர்வும் கிடைக்க வேண்டுமென்றால் அமாவாசை அன்று இரவு சிறப்பு யாகம் நடத்த வேண்டும் என கூறினார்.

இதற்காக முதல்கட்டமாக அவருக்கு ரூ. 50 ஆயிரம் கொடுத்தேன். பின்னர் எனது வீட்டில் உள்ள பணம், தங்க நகைகள், வெள்ளிப் பொருட்களை வைத்து ஒரு நாள் முழுவதும் யாகம் நடத்தினால் செல்வம் மேலும் குவியும் என கூறினார்.

இதனால் அவர் கூறிய இடத்துக்கு ரூ.20 லட்சத்து 55 ஆயிரம் ரொக்கம், 193 கிராம் தங்க நகைகள், 1.3 கிலோ வெள்ளிப் பொருட்களை கொண்டு சென்று கொடுத்தேன். பூஜையை முடித்து பொருட்களை தருவதாக சொன்ன அவர், பின்னர் தலைமறைவானார். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து பாரதிநகர் போலீஸார் கிளி ஜோசியர் சேகரின் செல்போன் எண்ணை அடிப்படையாகக் கொண்டு விசாரணை மேற்கொண்டனர். தமிழகத்தை சேர்ந்த அவர், தினமும் ரயிலில் பெங்களூருவுக்கு வந்து கிளி ஜோசியம் பார்த்து செல்வது தெரியவந்தது. அவரிடம் கிளி ஜோசியம் பார்க்க விரும்புவதாக போலீஸார் ஆசைவார்த்தைகளைக் கூறி, பெங்களூருவுக்கு வரவழைத்தனர். இதையடுத்து முன்தினம் இரவு பெங்களூருவுக்கு வந்த கிளி ஜோசியர் சேகரை கைது செய்தனர். அவர் மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதல் கட்டமாக, அவரிடம் இருந்து ரூ.12 லட்சம் ரொக்கம், 147 கிராம் தங்க நகைகளை பறிமுதல் செய்துள்ளனர்.

நில அபகரிப்பு வழக்கு: முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கருக்கு சம்மன் வழங்க உத்தரவு

கரூர்: அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் தொடர்புடைய நில அபகரிப்பு வழக்கில் அவர் விசாரணைக்கு ஆஜராக சம்மன் வழங்க சிபிசிஐடி போலீசாருக்கு கரூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூர் மாவட்டம் வாங்கல் குப்பிச்சிபாளையம் பகுதியை சேர்ந்த தொழிலதிபர் பிரகாஷ் கடந்த 2024ஆம் ஆண்டு வாங்கல் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்திருந்தார்.

அதில், 'கரூர் கோடங்கிபட்டியில் தனது மகள் பெயரில் உள்ள ரூபாய் 100 கோடி மதிப்பிலான 22 ஏக்கர் நிலத்தை, அதிமுக கரூர் மாவட்ட செயலாளரும், முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சருமான எம்.ஆர்.விஜயபாஸ்கர் உள்ளிட்ட 17 பேர் போலியான ஆவணங்களை தயாரித்து, நிலத்தை அபகரித்துக் கொண்டார்' என்று புகார் அளித்திருந்தார். இந்த வழக்கு கரூர் சிபிசிஐடி போலீசாருக்கு மாற்றப்பட்டது.

இந்த புகாரின் அடிப்படையில், ஆறு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்த சிபிசிஐடி போலீசார், கடந்த 2024ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் தேதி கேரளா திருச்சூரில் தலைமறைவாக இருந்த அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர் விஜயபாஸ்கர் மற்றும் அவரது சகோதரர் சேகர் பிரவீன் உள்ளிட்டோரை கைது செய்தனர். இதே வழக்கில் கண்டுபிடிக்க முடியாத ஆவணத்திற்கான சான்றிதழ் வழங்கியதாக வில்லிவாக்கம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வந்த பிரதிவிராஜ் என்பவரும் கைது செய்யப்பட்டார்.

இந்த முன்னாள் அமைச்சர் எம்.ஆர் விஜயபாஸ்கர் உள்ளிட்ட 17 பேர் முன்ஜாமீன் பெற்ற நிலையில், வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழக்கு தொடர்பாக, பினாமி தடுப்புச் சட்டத்தின் கீழ் பினாமி பெயரில் சொத்துக்கள் வாங்க அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் முயற்சி செய்ததாக சென்னையில் உள்ள வருமான வரித்துறை புலனாய்வு துறை கடந்த 2025ஆம் ஆண்டு மே மாதம் விசாரணை நடத்தியது.

இந்நிலையில் இந்த வழக்கில் சிபிசிஐடி போலீசார், கரூர் சிஜேஎம் நீதிமன்றம் -1இல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தனர். இதனைத்தொடர்ந்து, இந்த வழக்கு தொடர்புடைய முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் உள்ளிட்ட 17 பேரும் விசாரணைக்கு ஆஜராக சம்மன் அனுப்ப நீதிபதி பரத்குமார் உத்தரவிட்டார். மேலும் இந்த வழக்கு விசாரணை, மே 11ஆம் தேதி நடைபெற உள்ளதாகவும் கூறி, வழக்கை நீதிபதி பரத்குமார் ஒத்திவைத்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கரூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தேர்தலில் போட்டியிட முனைப்பு காட்டி வருகிறார். இந்நிலையில், சிபிசிஐடி போலீசாரின் சம்மன் விவகாரம் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் அருகே சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கொடி அணி வகுப்பு

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூரில் வருகின்ற சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கலந்து கொண்ட கொடி அணிவகுப்பு ராணுவம் காவல்துறை மற்றும் ஊர்காவல் படையினர்

வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கொடி அணி வகுப்பு நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது.

இன்று செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் காவல் நிலையத்துக்குட்பட்ட விலங்கனூர் கிராமப் பகுதியில் செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜமன் ஜமால் அவர்களின் முன்னிலையில் துணை ராணுவம், காவல்துறையினர் மற்றும் ஊர்க்காவல் படையினர் ஆகியோர், பொதுமக்களிடம் அச்சமின்றி வாக்களிப்பது குறித்து விழுப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கொடி அணிவகுப்பு நிகழ்ச்சி நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவிகள் சிலர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுடன் இணைந்து அணிவகுப்பில் நடந்து சென்றனர்.

எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக (புதிய கட்டிடம்) முதல் தளத்தில் (18.03.2026) அன்று செயல்பட்டு வரும் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி முன்னிலையில் ஈரோடு மாவட்டத்திலுள்ளஅனைத்துசட்டமன்றதொகுதிகளுக்குநியமிக்கப்பட்டுள்ளதேர்தல்பொதுப்பார்வையாளர்கள்,தேர்தல் காவல் பார்வையாளர் மற்றும் தேர்தல் செலவினப்பார்வையாளர்கள் ஆகியோர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல்தளத்தில்(18.03.2026)அன்றுசெயல்பட்டுவரும்தேர்தல்கட்டுப்பாட்டுமையத்தினைமாவட்டதேர்தல்அலுவலர் /மாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமிமுன்னிலையில்ஈரோடுமாவட்டத்திலுள்ளஅனைத்துசட்டமன்றதொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பொதுப்பார்வையாளர்கள், தேர்தல் காவல் பார்வையாளர் மற்றும் தேர்தல் செலவினப்பார்வையாளர்கள் ஆகியோர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

வளைகுடா நாடுகள் மீது ஈரான் தாக்குதல் எதிரொலி 115 டாலராக அதிகரித்த கச்சா எண்ணெய் விலை!

தெஹ்ரான்: தனது முக்கிய எரிவாயு வயல்களில் ஒன்றின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக, பல வளைகுடா எரிசக்தி நிலையங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாலும், தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்படும் என எச்சரித்துள்ளதாலும் இன்று பிரென்ட்கச்சாஎண்ணெய் விலை பேரல் ஒன்றுக்கு 115 டாலரைத் தாண்டியது. மேலும், பங்குச் சந்தைகளும் சரிந்தன.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதையடுத்து, இஸ்ரேலுக்குஎதிராகவும்,வளைகுடா பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க தளங்கள் மற்றும் வளைகுடா

நாடுகளின் எரிசக்தி நிலையங்கள் ஆகியவற்றை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியில் கச்சா எண்ணெய் உள்ளிட்ட எரிபொருட்களை ஏற்றிச் செல்லும் வர்த்தக கப்பல்களுக்கு ஈரான் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்நிலையில், ஈரானில் உள்ள முக்கிய எரிவாயு வயலான சவுத் பார்ஸ் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக, கத்தாரின் ராஸ் லஃபான் ஆலை மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும், கத்தார் கடற்கரைக்கு அப்பால் ஒரு கப்பல் சேதமடைந்தது. அதோடு, ஐக்கிய அரபு அமீரகத்தின் கடற்கரைக்கு அப்பால் ஒரு கப்பல் எரிந்து சாம்பலானது.

ஈரானின் தாக்குதல் குறித்து அந்நாட்டு ராணுவத்தின் செயல் தளபதி காதம் அல் அன்பியா வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரானின் எரிசக்தி கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் எதிரிகள் ஒரு பெரும் தவறை இழைத்துள்ளனர் என நாங்கள் எச்சரிக்கிறோம். இதற்கான பதிலடி நடவடிக்கை தற்போது நடைபெற்று வருகிறது. அது இன்னும் முடிவடைய வில்லை. கச்சா எண்ணெய் விலை கடுமையாக அதிகரித்துள்ளது,அமெரிக்கடாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 93.26 என வீழ்ச்சி கண்டது உள்ளிட்ட காரணங்களால் இந்திய பங்குச் சந்தையில் இன்று கடும் வீழ்ச்சி நிலவியது.

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான பொதுத்தேர்தல் 2026

85வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தபால் மூலம் வாக்குகள் செலுத்துதல் தொடர்பான அறிவிப்பு

தமிழகத்தில்வருகின்ற 23.04.2026 அன்று ஈரோடு மாவட்டத்தில் உள்ள எட்டு சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் நடக்கிறது. தேர்தலில் ஒட்டு சாவடிக்கு சென்று வாக்கு அளிக்க முடியாத 85 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் தங்களது ஒட்டுக்களை தபால் மூலம் செலுத்த தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

இதற்காக சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதியில் தொடர்புடைய வாக்கு சாவடி நிலை அலுவலர்கள் (BLOs), 85 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு இதற்கான படிவம் 12டி (12D) வழங்கி ஒப்புதல் பெற உள்ளனர். சம்மந்தப்பட்ட வாக்காளர்கள் வீட்டில் இல்லையெனில்,இரண்டாவது முறை நேரில் சென்று வழங்கி ஒப்புதல் பெறுவார்கள்.

இதன் பின்னர், இவ்வாக்காளர்கள் வீட்டிலிருந்தவாறே வாக்களிக்க விருப்பம் தெரிவித்து படிவம் 12D பூர்த்தி செய்து திரும்ப வழங்குபவர்களுக்கு மட்டும் பின்னொரு

நாளில் அவர்கள் வாக்களிக்க ஏதுவாக வாக்காளரின் குடியிருப்பு பகுதிக்கு வாக்கு பதிவு அலுவலர்கள் வருகை தரும்நாள் மற்றும்நேரம் குறித்து, வெகு முன்னராகவே 12D படிவத்தில் வாக்காளர் தெரிவித்த அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். அலைபேசி எண் குறிப்பிடாதவர் களுக்கு அஞ்சல் மூலமாக அல்லதுசம்மந்தப்பட்டவாக்குச்சாவடிநிலைஅலுவலர் மூலமாக தகவல் தெரிவிக்கப்படும்.

அவ்வாறு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வாக்குச்சாவடி அலுவலர் குழு வாக்காளர் வீட்டுக்குச் சென்று வாக்காளர் அடையாளத்தை சரிபார்த்து, அவ்விபரத்தை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து, வாக்காளரின் கையொப்பம்/கைரேகை பெற்றுக் கொண்டு வாக்களிக்கும் முறை குறித்து விளக்கி, அஞ்சல் வாக்குச்சீட்டினை வழங்குவார்கள். வாக்காளர் கண்பார்வையற்று அல்லது உடல்நலிவு காரணமாக வாக்காளிக்க இயலாத நிலையிலிருப்பின் அவரது சார்பில் கட்சி சார்பற்ற வயது வந்த ஒருவரை, வாக்களிப்பு குறித்து ரகசியம் காப்பு உறுதிமொழி பெற்றுக் கொண்டு வாக்களிக்க அனுமதிக்கப்படுவார். முதல்முறை வாக்காளர்களின் வீட்டுக்கு வாக்கு சாவடி நிலை அலுவலர் செல்லும் போது, அவர்

அங்கு இல்லை என்றால், இரண்டாவது முறை வருகை குறித்து தகவல் அளித்து வாக்கு சாவடி நிலை அலுவலர், வாக்காளரின் அஞ்சல்-வாக்குப் பதிவினை பெற வருவார். அதுசமயமும் வாக்காளர் வீட்டில் இல்லை எனில், இதற்கான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது. மாற்றுத் திறனாளிகளைபொறுத்தவரை, அவர்கள் மாற்றுத்திறனாளிகள் தான் என்பதற்கு தகுந்த அரசு சான்றிதழ் நகலினை அளிக்க வேண்டும். இது தொடர்பாக சந்தேகங்கள் ஏதுமிருப்பின் இவ்வலுவலக கட்டணமில்லா அலைபேசி எண். 1800 425 0424ஐ தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (18.03.2026) அன்று தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்கள் மற்றும் உதவிபொறுப்பு அலுவலர்கள் மேற்கொண்டுவரும் தேர்தல் 2026 பணிகள் குறித்து ஈரோடு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பொதுப்பார்வையாளர்கள், தேர்தல் காவல் பார்வையாளர் மற்றும் தேர்தல் செலவினப்பார்வையாளர்கள் ஆகியோர்கள் முன்னிலையில் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு: சிசிடிவியில் சிக்கிய இளைஞர் கைது

தூத்துக்குடி: விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில் சாயல்குடியை சேர்ந்த 30 வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே மார்ச் 10ஆம் தேதி காணாமல் போன 12ஆம் வகுப்பு மாணவி, மறுநாள் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். தமிழகத்தையே உலுக்கிய இந்த சம்பவத்தை நிகழ்த்தியவர்களை கைதுசெய்யவலியுறுத்தி பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் பல்வேறு கட்ட போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதன் உத்தரவின் பேரில் 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, பல கோணங்களில் விசாரணை நடைபெற்று வந்தது. குறிப்பாக, கொலை வழக்கில் தொடர்புடைய நபர்கள் யார் என்பது குறித்து மாணவியின் உறவினர்கள், கிராமத்தை சேர்ந்தவர்கள், பள்ளி மாணவர்கள், அப்பகுதி அருகே வேலை பார்க்கும் வடமாநில தொழிலாளர்கள் என வீடு வீடாக சல்லடை போட்டு விசாரணை நடத்தினர்.

ஆனால், மாணவி கொலை வழக்கில் தொடர்புடைய நபர்களை கண்டுபிடிக்க முடியாமல் கடந்த 9 நாளாக போலீசார் திணறி வந்தனர். இந்நிலையில், சந்தேகத்தின்

அடிப்படையில் 5 பேரிடம் விசாரணை நடத்திய போலீசார், அவர்களது டி.என்.ஏவை மருத்துவப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இருந்தாலும், குற்றமிழைத்தவர்களை கைது செய்யும் வரை போராட்டம் தொடரும் என ஒரு வாரத்திற்கு மேலாக மாணவியின் உறவினர்கள் போராட்டம் நடத்தி வந்தனர். அதனால், இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக காவல்துறை துணை கண்காணிப்பாளர் சுந்தரபாண்டியன் நியமனம் செய்யப்பட்டு, விசாரணை தீவிரமடைந்தது. இந்நிலையில், வேடநத்தம் கிராமம் காட்டு பகுதியில் அமைந்துள்ள ஒரு காற்றாலையின் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்ததில், சம்பவத்தன்று அந்த பகுதியில் ஒரு இருசக்கர வாகனம் இருப்பதை போலீசார் கண்டறிந்துள்ளனர். அந்த இருசக்கர வாகனத்தின் நம்பரை சிசிடிவி காட்சிகள் அடிப்படையில் சோதனை செய்ததில், அது ராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் பகுதியிலிருந்து மர்ம நபரால் திருடி கொண்டு வரப்பட்டதும், அது தொடர்பாக ஏற்கனவே புகார் கொடுக்கப்பட்டது தெரியவந்தது. அதையடுத்து, ராமநாதபுரம் சென்ற போலீசார், பைக் திருட்டு தொடர்பாக சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்தனர்.

அதில், பைக் திருட்டில் ஈடுபட்டது அடையாளம் தெரியாத நபர் என்பது தெரியவந்தது. இதனால், ராமநாதபுரத்தில் பைக்கை திருடிய நபர், மாணவி கொலை செய்யப்பட்ட காட்டுப்பகுதிக்கு எதற்காக சென்றார் என்ற கோணத்தில் விசாரணை நடத்தினர்.

இதுபோன்ற சூழலில், பள்ளி மாணவி கொலை செய்யப்பட்ட வழக்கில் மாவீரன் (எ) தர்ம முனீஸ்வரன் (30) என்ற இளைஞரை போலீசார் கைது செய்தனர். இவர் சாயல்குடியை சேர்ந்தவர் என்பதும், இவர் மீது ஏற்கனவே பல்வேறு குற்ற வழக்குகள் உள்ளது என்பதும் தெரிய வந்தது.

இதுமட்டுமின்றி, சம்பவம் நடந்த இடத்தில் முனீஸ்வரனின் செல்போன் சிக்னல் இருந்ததும் தெரியவந்துள்ளது. இதனால், அவரை கைது செய்துள்ள போலீசார் விசாரணையை முடுக்கிவிட்டுள்ளனர். இந்த வழக்கில், மேலும் இருவரை கைது செய்துள்ளதாகவும், அவர்களது விவரம் விரைவில் வெளியாகும் எனவும் போலீசார் தரப்பில் தகவல் வெளியாகியுள்ளது.

முதல்கட்ட விசாரணையில், தர்ம முனீஸ்வரன் கடந்த 2020 ஆம் ஆண்டு எட்டயபுரம் அருகே விவசாய நிலத்திற்கு சென்ற 65 மூதாட்டியை பாலியல் தொல்லை செய்து கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்டவர் என்பது தெரிய வந்துள்ளது. இந்த கொலை வழக்கில் 2 ஆண்டுகள் குற்றவாளியை கண்டுபிடிக்க முடியாத சூழலில், கடந்த 2022ஆம் ஆண்டு முனீஸ்வரனை போலீசார் கைது செய்தனர். விசாரணையில் மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்து, நகை திருடியதை ஒப்புக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, இந்த வழக்கில் தர்ம முனீஸ்வரனை காவல் துறையினர் கைது செய்தது தொடர்ந்து, கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக போராட்டம் நடத்தி வந்த மாணவியின் உறவினர்கள், அவரது உடலை வாங்க ஒத்துக் கொண்டனர்.

வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் (19.03.2026) நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் ஆகியோர் உள்ளனர்.

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (19.03.2026) ஈரோடு மாநகராட்சி சம்பத்நகர் உழவர் சந்தையில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் காய்கறி வியாபாரிகளிடம் துண்டுபிரசுரங்கள் வழங்கி தேர்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (19.03.2026) நேற்று ஈரோடு மாநகராட்சி சம்பத்நகர் உழவர் சந்தையில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த செல்பி பாயிண்டில் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (19.03.2026) ஈரோடு மாநகராட்சி சம்பத்நகர் உழவர் சந்தையில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பொதுமக்களிடம் துண்டுபிரசுரங்கள் வழங்கி தேர்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு நேற்று (19.03.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் செய்தியாளர்களுக்காக நடத்தப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு குறித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு உரிய விடையினை அளித்து அதிக மதிப்பெண்கள் பெற்ற செய்தியாளர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி புத்தகம் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். இந்நிகழ்வின் போது திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார் ஆகியோர் உடனிருந்தார்கள்.

அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் சார்பாக

வருகின்ற சட்டமன்ற தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிக்க வேண்டும் என விழிப்புணர்வு நிகழ்ச்சி

கோவை சரவணம்பட்டி அடுத்த கீரணத்தம் பகுதியில் நடைபெற்றது

மாண்புமிகு நீதியரசர் கற்பகவிநாயகம் அவர்களது, வழிகாட்டுதலின் பேரில், அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் முன்னெடுக்க பட்டு வருகிறது.இதன் ஒருபகுதியாக கோவை சரவணம்பட்டி அடுத்த கீரணத்தம் பகுதியில் உள்ள ஸ்டிட்ஜ்வெல் நிறுவன வளாகத்தில், வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் மகளீர் தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் நிறுவன தலைவர் ஆர்.கே.குமார் வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன், மாவட்ட துணைத் தலைவர் செந்தில் குமார் ஆகியோர் தேர்தல் குறித்து உரையாற்றினர். சிறப்பு விருந்தினராககலந்துகொண்ட அமைப்பின் மகளீரணி வழக்கறிஞர் பிரிவின் மாவட்ட தலைவரும், வழக்கறிஞருமான தேன்மொழி என் வாக்கு, என் உரிமை எனும் தலைப்பில் விழா பேருரையாற்றினர். அப்பொழுது வாக்கு செலுத்துவதன் அவசியம் குறித்தும், வாக்காளர்களின் கடமை குறித்தும் எடுத்துக்கூறினார்.தொடர்ந்து மகளீர் தினவிழாவை போற்றும் வகையில் பெண்கள் கடந்து வந்த பாதைகள் குறித்தும், இன்றைய நவீன உலகில் பெண்களின் பங்களிப்பு குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார்.பெண்கள் அறியாமை எனும் இருட்டில் இருந்து மீண்டு வர இத்தனை ஆண்டுகள் கடந்தும், அறியாமை இருள் இன்னுமும்கிராமபுறங்களில் இருந்து வருகின்றது. இவற்றை கழைய நகரத்து பெண்கள் முன் வர வேண்டும் என தெரிவித்தார். சண்முக சுந்தரம், அமைப்பின் மாவட்ட செயலாளர் விஜயராவ், துணை தலைவர் எல்.ஐ.சி ராஜேஷ், அமைப்பின் மகளீரணி மாவட்ட தலைவர் எல்ஐசி.சாந்தி,மற்றும்சிகாமணி, கலைகண்ணன், துணை ஆசிரியர் செந்தில் குமார், ஆசிரயர் சண்முக சுந்தரம், சரவணன், கந்த வேல், ஸ்ரேயா, சூர்யா மற்றும் ஸ்டிட்ச்வெல் நிறுவன மகளீர்கள், பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள, ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கல்லூரியில் 35வது ஆண்டு கல்லூரி தினவிழா கொண்டாடப்பட்டது

இதில் சிறப்பு விருந்தினராக திரைப்பட நடிகர் ஆரி அர்ஜீனன் கலந்து கொண்டு மாணவிகள் மத்தியில் சிறப்புரை



கோவை ஆவாரம்பாளையத்தில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 35வது கல்லூரி தினவிழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் திரைப்பட நடிகரும் தன்னம்பிக்கைப் பேச்சாளருமான ஆரி அர்ஜுனன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவிகள் மத்தியில் சிறப்புரையாற்றினார். அப்பொழுது அவர் கூறியதாவது.. தோல்விகள் நம்மை வெற்றியாளராக்கும், அவமானங்கள்தான் நம்மை சாதனையாளராக்கும். அதனால் உங்களுக்கு நேரும் அவமானங்களை வென்று காட்டுங்கள். கல்வியோடு மாணவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதன்மூலம் சம்பாதிக்கவும் முறையாக முதலீடு செய்து பொருளாதாரத்தை நிர்வகிக்கும் ஆற்றலையும் பெற வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினரும் கல்லூரியின் முன்னாள் மாணவியுமான அமெரிக்கா வின் டிஸ்கௌண்ட் டைர் நிறுவனத்தின் குவாலிட்டி அஷ்யூரன்ஸ் பிரிவின் துணைமேலாளர் திவ்யா கனகராஜ் கலந்து கொண்டு மாணவிகள் மத்தியில் கூறியதாவது.. பெண்களின் வாழ்க்கையை வடிவமைப்பதில் கல்லூரிக்குப் பெரும்பங்கு இருப்பதாகவும், மற்றவர்களோடு ஆக்கப்பூர்வமான நட்புறவு பேணுதல், நம் வெற்றிக்குத் துணைநிற்கும் உந்துசக்திகளை மதித்தல், நம்முடைய பலவிதத் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளுதல் போன்ற பண்புகள் நம்மை மேம்படுத்த உதவும் என்றதோடு, வாய்ப்புகளைக் கண்டறிந்து பயன்படுத்திக் கொள்ளவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

முன்னதாகக் கடந்த கல்வியாண்டில் கல்லூரி பெற்ற சிறப்புகளையும் மாணவிகளின் சாதனைகளையும் உள்ளடக்கிய ஆண்டறிக்கையைக் கல்லூரி முதல்வர் முனைவர் சித்ரா வாசித்தார். எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் முதன்மைநிர்வாகஅலுவலரும் ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் செயலருமான சி.வி. ராம்குமார் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த மாணவிகள் மற்றும் பேராசிரியர்களுக்குப் பரிசுகளும் பெஸ்ட் அவுட்கோயிங் விருதுகளும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.,

பெங்களூருவில் பலத்த மழை எதிரொலி: 30க்கும் மேற்பட்ட விமானங்கள் சென்னையில் தரையிறக்கம்

சென்னை: பெங்களூருவில் பெய்த பலத்த மழை காரணமாக அங்கு தரையிறங்க வேண்டிய சர்வதேச மற்றும் உள்நாட்டு விமானங்கள் சென்னை விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டது. மழை மற்றும் குளிர்காலங்களில் நாட்டில் பல்வேறு மாநகரங்களில் விமான சேவையில் பாதிப்பு ஏற்படுவது வழக்கம். குறிப்பாக திடீர் மழை, புயல் எச்சரிக்கை மற்றும் பனிமூட்டம் போன்ற காலகட்டங்களில் விமானங்களை இயக்குவது பெரும் சவாலானதாக இருக்கும். இயற்கை சூழல் சவாலாக இருக்கும் பகுதிகளில் விமான போக்குவரத்தில் திடீரென பாதிப்புகள் ஏற்படும்.அந்த வகையில், கர்நாடக மாநிலம் பெங்களூருவில் நேற்று இரவு சூறைக்காற்றுடன் பலத்த மழை கொட்டியது. இதன் காரணமாக மோசமான வானிலை நிலவியதால் பெங்களூரு விமான நிலையத்தில் தரையிறங்க வேண்டிய உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள் அனைத்தும், பெங்களூருவில் தரையிறங்க முடியாமல் வானில் வட்டமடித்தன. அதன் பின்பு அந்த விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக சென்னை, ஹைதராபாத், கோயம்புத்தூர், திருச்சி உள்ளிட்ட விமான நிலையங்களுக்கு திருப்பி

அனுப்பப்பட்டன. சென்னை விமான நிலையத்தில் நேற்று இரவு அபுதாபி, பாங்காக், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து வந்த சர்வதேச விமானங்கள் மற்றும் டெல்லி, மும்பை, ஜெய்ப்பூர், கொல்கத்தா, புவனேஸ்வர், அகமதாபாத், பாட்னா, அமிர்தசரஸ், ஸ்ரீநகர், ஹைதராபாத் உள்ளிட்ட சுமார் 30 உள்நாட்டு விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து தரையிறங்கின.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.